பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 08 2024 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யுக்ரைன் பயணத்தின்போது வேளாண்மை, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.
- அமெரிக்கா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு லாயிட் ஆஸ்டினுடன் இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.
- உலகளாவிய சவால்களுக்கு இடையில் இந்திய பொருளாதாருமும் ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- நாட்டின் பாதுகாப்புக்கும், ஒற்றுமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.
- ஆசியான் அலைச்சறுக்குப் போட்டியில் 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் கிஷோர் குமார் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் யுக்ரைன் பயணத்தின்போது வேளாண்மை, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதன் மூலம் வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதலில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு அதிகரிக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய மருந்துகள் தரக்கட்டுப்பாட்டு அமைப்புக்கும், யுக்ரைன் மருந்து ஒழுங்குமுறை துறைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இதன்மூலம் மருந்துப் பொருட்களின் பாதுகாப்பு தர நிலைகள் தொடர்பான ஒத்துழைப்பு மேம்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக மேம்பாட்டுத் திட்டங்களை அமல்படுத்துதல், நாடகம், இசை, நுண்கலைகள் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் இருநாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

பிரதமரின் யுக்ரைன் பயணத்தின்போது பயங்கரவாத ஒழிப்பு, பருவநிலை மாற்ற சவால்கள், சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு போன்றவை குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது யுக்ரைன் பயணம் வரலாற்றுச் சிறப்பாக அமைந்து என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

யுக்ரைன் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நேற்றிரவு புதுதில்லி புறப்பட்டார்.

<<<<>>>>

நாட்டின் பாதுகாப்புக்கும், ஒற்றுமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சி செயல்படுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், காங்கிரஸ் கட்சிக்கு 10 கேள்விகளை எழுப்பியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள காங்கிரஸ், அக்கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளை ஆதரிக்கிறதா என திரு. அமித் ஷா கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய மாநாட்டுக் கட்சி அளித்துள்ள தேர்தல் வாக்குறுதிகள் தேசப் பாதுகாப்புக்கு ஆபத்தானவை எனவும், இடஒதுக்கீட்டுக்கு எதிரானது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் தேசப் பாதுகாப்பு குறித்து அக்கறையின்றி காங்கிரஸ் செயல்படுவதாக அவர் குறை கூறியுள்ளார்.

இந்நிலையில் திரு. அமித் ஷா எழுப்பியுள்ள கேள்விகளுக்கு உரிய நேரத்தில் பதிலளிக்கப்படும் என ம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேச காங்கிரஸ் தலைவர் திரு. தாரிக் ஹமீத் கூறியுள்ளார்.

இதனிடையே காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அமெரிக்கா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு லாயிட் ஆஸ்டினுடன் வாஷிங்டனில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, மண்டலப் பாதுகாப்பு மற்றும் பிற சர்வதேச விவகாரங்கள் குறித்து அவர்கள் விரிவான ஆலோசனை மேற்கொண்டனர்.

கடந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்தியா-அமெரிக்க பாதுகாப்பு தொழில்துறை ஒத்துழைப்பு திட்டம் குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்தியாவில் பாதுகாப்புத் துறையில் உள்ள உற்பத்தி வாய்ப்புகளை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் எடுத்துரைத்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான பாதுகாப்புத் தொழில் துறை விநியோக நடைமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது குறித்து இரு அமைச்சர்களும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

அதிகாரிகளை அனுப்புவது தொடர்பாக இந்தியா - அமெரிக்கா இடையே ஒப்பந்தம் கையெழுத்தானதை இரு அமைச்சர்களும் வரவேற்றனர்.

<<<<>>>>

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலகளாவிய சவால்களுக்கு இடையில் இந்திய பொருளாதாருமும் ஏற்றுமதியும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற, இந்திய பட்டயக் கணக்காளர்கள் கல்வி நிறுவனத்தின் மேற்கு மண்டல கவுன்சிலின் 38-வது மண்டல மாநாட்டில் நேற்று அவர் உரையாற்றினார்.

பட்டயக் கணக்காளர்கள், நவீன தொழில்நுட்பங்களில் தேர்ச்சி பெற்றுத் திகழ வேண்டும் என அவர் அறிவுறுத்தினார். அடுத்த 6 முதல் 8 ஆண்டுகளில், பட்டயக் கணக்காளர்களின் எண்ணிக்கை 10 லட்சமாக உயரும் என்று அவர் கூறினார்.

வளர்ந்த நாடுகளே தற்போது அதிக பணவீக்கத்தை எதிர்கொண்டு வரும் நிலையில், இந்தியப் பொருளாதாரம் நல்ல நிலையில் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சிறந்த நிதிக் கொள்கைகளால், இந்தியாவில் பணவீக்கம் கட்டுப்பாட்டில் உள்ள என்று திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் ரயில்வே துறை மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது என அத்துறைக்கான இணை அமைச்சர் திரு வி.சோமன்னா கூறியுள்ளார்.

கர்நாடக மாநிலம் தும்கூர் ரயில் நிலையத்தில் வந்தே பாரத் ரயில் நின்று செல்லும் வசதியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ரயில்வே கட்டமைப்புகள் மேம்பட்டால் நாட்டின் வளர்ச்சியும் அதிகரிக்கும் என்றார். கர்நாடகாவைப் பொறுத்தவரை 2014-ம் ஆண்டுக்கு முன்பு 5 ஆண்டுகளில் ரயில்வேத் துறைக்கு 800 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக அவர் கூறினார். தற்போது அது 7 ஆயிரத்து 500 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று திரு சோமண்ணா தெரிவித்தார்.

<<<>>>

காதி மற்றும் கிராமத் தொழில்களின் வணிகம் ஒரு லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி இருப்பதாக, காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் தலைவர் திரு மனோஜ் குமார் கூறியுள்ளார்.

மும்பை போரிவலியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2014-ம் ஆண்டில் இது 31 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது என்றார்.

இத்துறையில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

<<<>>>

21-வது தேசிய கால்நடைக் கணக்கெடுப்பை வெற்றி அடையச் செய்வதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கூட்டுப் பொறுப்பு உள்ளது என மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை செயலாளர் திருமதி அல்கா உபாத்யாயா கூறியுள்ளார்.

இந்த கணக்கெடுப்பு தொடர்பாக வடகிழக்கு மாநில அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்றுப் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களில் தேசிய கால்நடை இயக்கத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்தப் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும், தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் திட்டங்களை செயல்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்

<<<>>>

திரிபுராவில் கடந்த சில நாட்களில் பெய்த கனமழை காரணமாக 24 பேர் உயிரிழந்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

எட்டு மாவட்டங்களிலும் 558 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 1 லட்சத்து 28 ஆயிரம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மாநில அரசு கூறியுள்ளது.

மாநிலம் முழுவதும் 17 லட்சம் பேர் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெள்ளம் பாதித்த பகுதிகளை மாநில முதலமைச்சர் திரு மாணிக் சஹா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதனிடையே அகர்தலாவில் வரும் 31 மற்றும் செப்டம்பர் 1-ம் தேதி, நடைபெறவிருந்த வடகிழக்கு கவுன்சில் கூட்டம், கனமழை சேதங்கள் காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா 3 நாள் பயணமாக நேற்று இரவு சத்தீஸ்கர் மாநிலத்துக்குச் சென்றடைந்தார்.

ராய்ப்பூரில் நக்சல் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இன்று நடைபெறும் கூட்டத்துக்கு அவர் தலைமை வகிக்கவுள்ளார்.

நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையில் மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு குறித்து சத்தீஸ்கர் மற்றும் அண்டை மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் பங்கேற்கும் கூட்டத்திற்கும் அவர் தலைமை வகிக்கவுள்ளார்.

நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்த கூட்டத்திலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

ராய்ப்பூரில் கட்டப்பட்டுள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டு அமைப்பின் அலுவலகத்தை திரு அமித் ஷா நாளை திறந்து வைக்கவுள்ளார்.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கோட்டையை பாரம்பரிய சுற்றுலாத்தலமாக மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுகுறித்து மத்திய தொல்லியல்துறை மற்றும் மாநில அரசு சார்பில் ஆய்வு மேற்கொண்டுள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆசியான் அலைச்சறுக்குப் போட்டியில் 18 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் கிஷோர் குமார் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மாலத்தீவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் அவர், முதலிடம் பிடித்து அரை இறுதிக்குத் தகுதி பெற்றார்.

இதன் மூலம் இப்போட்டியில் அரை இறுதிக்கு முன்னேறும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

அரை இறுதிப் போட்டி நாளை நடைபெற உள்ளது.

<<<<>>>>

செயிண்ட் லூயிஸ் **Sinque field** செஸ் போட்டியின் நான்காவது சுற்றில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் குகேஷ் தங்களது ஆட்டங்களை டிரா செய்தனர்.

நான்கு சுற்றுகள் முடிவில் குகேஷ், பிரக்ஞானந்தா உள்ளிட்ட 6 வீரர்கள் 2 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

<<<<>>>>